**தலைப்பு 244 – வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களம்.**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்.

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்.

வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு 2021 யூன் 23 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு.**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரிய-தாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளி-வொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 5 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 02 மூலதனச் செலவின விடயங்களுக்காக ரூபா 10,250,000 ஆன மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 4,390,893 சேமிக்கப்பட்டிருந்ததுடன் தேறிய நிதிஏற்பாட்டின் 13 சதவீதத்திலிருந்து 54 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது. | அவதானிப்டன் இணங்குகின்றேன். 2401 இன் கீழான ரூபா 500,000 தொகை செய்முறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்திய மைக்காக ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்ததுடன் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்வதை கட்டுப்படுத்த வேண்டும். |

### 2.2. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10:1 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு உரியதாக வழங்கப்பட்டிருந்த 3.4 ஆம் இலக்க வழிகாட்டலுக்கு புறம்பாக திறைசேரிக்கு அறிக்கையிடப் படாதிருந்த ரூபா 65,299 பெறுமதியான பொறுப்புக்கள் | அச்செலவிடயத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக 2021 பெப்ரவரி மாதம் ரூபா 40,103 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது சாரதிகளால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தியமைக்காக செலுத்தப்பட்ட மேலதிக நேர படிகளாகும். அவ்வாறே 1101 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 2021 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | செலவின விடயத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 4,250 தொகை சாரதிகளின் இணைந்த படிக் கொடுப்பனவுகளுக்காக இருந்ததுடன் குறித்த வேண்டுகோள் 2021 சனவரி மாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அப்பெறுமதி 2020 ஆம் ஆண்டின் கடப்பாடாக காண்பிக்கப்படவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு.**

**3. செயலாற்றல்**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயற்பாடு களுக்கான பெறுகை திட்டம், சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாடு திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வருடாந்த பெறுகை திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் எதிர்வரும் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.12 கடமைகள் நிறைவேற்றப்படாமை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அரசினால் கைச்சாத்திட்டு தற்போது செயற்பாட்டு நிலைமையில் காணப்படும் BIMSTEC மற்றும் SAFTA ஆகிய இருதரப்பு மற்றும் பல்தரப்பு வியாபார உடன்படிக்கைகள் 02 இற்குரிய நிதிசார் அல்லது பௌதீக செயன் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | BIMSTEC மற்றும் SAFTA ஆகிய இரு உடன்படிக்கைகளுக்குரிய 2020 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த பல நிகழ்ச்சித்திட்டங்கள் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிற்போட வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வியாபார உடன்படிக்கைகள் மூலம் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் ஊழியர்களை பயிற்சியளிப்பதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டில் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் பயிற்சி சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியாதிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4. மனித வள முகாமைத்துவம்.

### 4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் ஆளணியினருக்கான சம்பளம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவியணியில் 62 பதவிகள் காணப்படுவதுடன் உள்ளவாறான 53 பதவிகளுக்காக மாத்திரம் இணைக்கப்பட்டுள்ளனர். 09 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அது ஆளணியில் 15 சதவீதமாக இருந்தது. இவ்வெற்றிடங் களில் சிரேஷ்ட மட்டத்தில் 01 பதவி வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இப்பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்புவதற்காக நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு நிதி அமைச்சிடம் பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தன. ஆரம்ப, இரண்டாம் தர மற்றும் மூன்றாம் மட்டத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதும் சுங்கத் திணைக்களம் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள வேறு பிரிவுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட உள்ளக இடமாற்றங்களால் மீண்டும் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன | ஊழியர் தேவைப்பாடு என்பவற்றை அடிப்படையாக கொண்டு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை முறைப்படி பராமரித்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |